## சுருக்கம்

திட்டம் மற்றும் வளர்ச்சி – திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அரசு மருத்துவமனைக்கு கட்டிடங்கள் பராமரிப்புக்கு பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.1,34,40,000/–க்கு – நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (எப்–1) துறை

அரசாணை (நிலை) எண்.556

நாள்:03.12.2018
விளம்பி, புரட்டாசி –23
திருவள்ளுவர் ஆண்டு, 2049

படிக்க:

மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநரின் கடித எண். 49063/திவ1/4/2018, நாள். 14.08.2018.

**********

**ஆணை:**

பார்வையில் படிக்கப்பட்ட கடிதத்தில் மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அரசு மருத்துவமனை 1956ம் வருடம் கட்டப்பட்டது என்றும், இம்மருத்துவமனை 78 படுக்கை வசதிகள் கொண்ட வட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது என்றும், இம்மருத்துவமனையின் புறநோயாளிகள் பிரிவு போளூர் நகரத்தின் மையத்திலும் உள்நோயாளிகள் பிரிவு நகருக்கு வெளியே அத்திமூர் செல்லும் சாலையில் போளூர் நகரிலிருந்து சுமார் 3.5 கி.மீ தூரத்திலும் அமைய பெற்று 2 பிரிவுகளாக செயல்பட்டு வருவதாகவும், மேலும் வெளிநோயாளர் பிரிவில் மக்களுக்கு காய்ச்சல், பிரசவம் ஆகியவற்றிற்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகவும் இந்த வெளிநோயாளிகள் பிரிவினையும், உள்நோயாளிகள் பிரிவுனையும் உள்நோயாளர் மருத்துவமனைக்கு போதிய இடவசதி இருந்தும் மாற்றிட இயலாத நிலை உள்ளது என்றும் எக்ஸ்ரே வசதிகள் மற்றும் USG Scan, விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவுகள், ஆம்புலன்ஸ் வசதி, ENT, Dental, சித்தா பிரிவு போன்ற பிரிவுகள் செயல்பட்டு வருகிறது என்றும், அம்மருத்துவமனை கட்டிடங்களை பராமரிப்பதற்காக திருவண்ணாமலை நல பணிகள் இணை இயக்குநர் ரூ.1,34,40,000/– நிதியினை வழங்குமாறு கோரியுள்ளார் என்றும் மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர் அவர்கள் திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அரசு மருத்துவமனை சிறப்பாக செயல்பட வேண்டியிருப்பதாலும், பொதுமக்கள் நலன் கருதியும் கட்டிடங்கள் பராமரிப்புக்காக பராமரிப்பு நிதியிலிருந்து ரூ.1,34,40,000/–க்கு (ரூபாய் ஒரு கோடியே முப்பத்தி நான்கு இலட்சத்து நாப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து தருமாறு அரசைக் கோரியுள்ளார். அதற்கான சென்னை பொது பணி துறையின் தலைமை பொறியாளர் அவர்களின் தோராய மதிப்பீட்டை அனுப்பியுள்ளார்.

3. மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இயக்குநர் அவர்களின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று திருவண்ணாமலை மாவட்டம் போளூர் அரசு மருத்துவமனையின் கட்டிடங்கள் பராமரிப்புக்காக பராமரிப்பு நிதியிலிருந்து

ரூ.1,34,40,000/– க்கு (ரூபாய் ஒரு கோடியே மூப்பத்தி நான்கு இலட்சத்து நாப்பதாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி மூன்றில் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்றுவைக்கப்பட வேண்டும்.

> "2059 பொதுப் பணிகள் – 01 அலுவலகக் கட்டடங்கள் – 053 பராமரித்தலும் செப்பனிடுதலும் – மாநிலச் செலவினங்கள் – BW கட்டடங்கள் – மருத்துவ மற்றும் கிராமப்புற சுகாதாரப் பணிகள் (தலைமைப் பொறியாளரின் (கட்டடங்கள்) நிருவாகத்தில் உள்ளவை) – 18 பராமரிப்பு –01 குறித்த காலப் பராமரிப்பு"
>
> ( த. தொ.கு. 2059–01–053– BW –1801)

5. இவ்வரசாணை நிதி துறையின் அ.சா.கு.எண்.50001/சுகாதாரம் 2/2018, நாள்: 09.11.2018 இசைவுடன் வெளியிடப்படுகிறது

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ஜெ. ராதாகிருஷ்ணன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர், சென்னை– 6.
இணை இயக்குநர் நலபணிகள், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்.
(மருத்துவம் மற்றும் ஊரக நல பணிகள் இயக்குநர், சென்னை–6 வழியாக)
தலைமைப் பொறியாளர் (கட்டிடம்), சென்னை–5.
மாநிலத் தலைமைக் கணக்காயர், சென்னை–18.
மாநிலத் தலைமைக் கணக்காயர் (தணிக்கை), சென்னை–35.
மாவட்ட கரூவூல அலுவலர், திருவண்ணாமலை.
நகல்:
நிதி (சுகாதாரம் – II/வ.செ. பொ–II/ பொ.ப.I)த் துறை, சென்னை–9.
மக்கள் நல்வாழ்வு (ம) குடும்ப நலத் டேட்டா செல்) துறை, சென்னை–9.
உதிரி நகல் / இருப்புக் கோப்பு.

// ஆணைப்பபடி அனுப்பப்படுகிறது//

10/12/18

பிரிவு அலுவலர்.